**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.07.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் அக்ரிசிபிஎஸ் (AgriCPS) நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகளில் முக்கிய பங்குவகித்து சிறந்து விளங்கும் ஓர் பல்கலைக்கழகமாகும். இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம் என்னுமிடத்தில் மரவள்ளி விவசாயிகள் பயனடையும் விதமான ஆராய்ச்சிகள் மற்றும் விரிவாக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் மரவள்ளி சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. சென்னையில் உள்ள அக்ரிசிபிஎஸ் (AgriCPS) என்னும் தொடக்க வணிக நிறுவனமானது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு பயிர் சாகுபடியில் உயர் விளைச்சலைப் பெற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து வருகிறது.

மரவள்ளிப் பயிரில் காலநிலை மாற்றத்திற்கேற்ப செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் மூலம் பயிர் சாகுபடிக்கு உகந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள், சொட்டு நீர் உரப்பாசனம் மற்றும் டிரோன் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து உரிய முன்னறிவிப்பின் மூலம் பயிர் இழப்பின்றி உயர் விளைச்சல் பெறுவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.07.2023 அன்று மதிப்பிற்குரிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர்.வெ.கீதாலட்சுமி அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா.தமிழ்வேந்தன் மற்றும் அக்ரிசிபிஎஸ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு.ஷெபரிப் பாபு அவர்களால் கையொப்பமிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட ஆராய்ச்சிக்கு ரூ.25.15 இலட்சம் செலவீனத்தில் ஆராய்ச்சி பணிகள் மூன்றாண்டுகள் மேற்கொள்ளப்படும். இந்த நிகழ்வில் பயிர் மேலாண்மை இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் மு.க.கலாராணி, மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.செ.மாணிக்கம், இணைப்பேராசிரியர் முனைவர்.எம்.வேல்முருகன் மற்றும் மரவள்ளி முன்னோடி விவசாயி திரு.எஸ்.கோவிந்தராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**